மே 17, 2023

**பிராம்ப்டன் நகரில் விக்டோரியா தினம் 2022**

பிராம்ப்டன், ON – இந்த ஆண்டின் விக்டோரியா தினம் மே 22, திங்கட்கிழமையன்று நிகழ்கிறது.

**அத்தியாவசியமான மற்றும் சிக்கலான சேவைகள்**

தீயணைப்பு மற்றும் அவசரகாலச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், சட்ட அமலாக்கம், சாலைப்பணிகள், மற்றும் பாதுகாப்பு சேவைகள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய சேவைகளும் வழக்கம்போல் தொடர்ந்து செயல்படும்.

**பட்டாசுகள்**

பிராம்ப்டனில் பட்டாசுகளை உபயோகிப்பது, வாங்குவது, பற்றவைப்பது, தங்கள் வசம் வைத்திருப்பது, காட்சிப்படுத்துவது, மற்றும் விற்பனை செய்வது ஆகியவை தடைசெய்யப்பட்டிருப்பதை பிராம்ப்டன் நகர நிர்வாகம் குடியிருப்பாளர்களுக்கு நினைவூட்டுகிறது.

குடியிருப்பாளர்களின் பாதுகாப்புதான் நகர நிர்வாகத்தின் முதன்மையான முன்னுரிமை கொண்ட விஷயமாகும், மேலும் பட்டாசுகளுக்கான சட்டமானது காயம் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதத்தின் அபாயத்தைத் தணிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

பட்டாசுகளைப் பயன்படுத்துவது மற்றும் விற்பனை செய்வது பற்றி புகாரளிக்க குடியிருப்புவாசிகள் 3-1-1 ஐ அழைக்கலாம், 3-1-1 செயலியைப் பதிவிறக்கலாம், அல்லது ஆன்லைனில் www.brampton.ca க்கு வரலாம். விதிகளைக் கடைப்பிடிக்க தவறுவோருக்கு $500 லிருந்து $1,000 வரை அபராதம் விதிக்கப்படும்; அல்லாமல் நீதிமன்ற அழைப்பு விடுக்கப்படுமேயானால் அபராதம் $100,000 வரை உயரலாம்.

மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/fireworks

**ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து**

விக்டோரியா தினம் அன்று, பிராம்ப்டன் பேருந்து போக்குவரத்து சேவையானது, ஞாயிற்றுக்கிழமை/விடுமுறை நாள் அட்டவணைப்படி செயல்படும். அனைத்து பேருந்து முனையங்களிலும்

வாடிக்கையாளர் சேவை கவுன்ட்டர்கள் மூடப்பட்டிருக்கும். தொடர்புக்கான மையமானது காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்தே இருக்கும். "தொலைந்துபோய் கிடைத்தவை" சேவை உள்பட பிராம்ப்டன் பேருந்து போக்குவரத்தின் க்ளார்க் (Clark) மற்றும் சாண்டல்வுட் (Sandalwood) வசதியமைப்புகள் மே 22, திங்கட்கிழமையன்று செயல்படமாட்டா.

www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது சேவை புதுப்பிப்புக்களுக்கு @bramptontransit ஐ ட்விட்டரில் பின்பற்றவும். கேள்விகள் இருப்பின் பிராம்ப்டன் பேருந்து போக்குவரத்து தொடர்பு மையத்திற்கு 905.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**பிராம்ப்டன் பொழுதுபோக்கு**

விக்டோரியா தின வார இறுதி வரை பிராம்ப்டன் பொழுதுபோக்கு மையங்கள் குறைக்கப்பட்ட நேரங்களுக்கு மட்டுமே செயல்படும். விடுமுறை தின நேரங்கள் இதோ: here.

**ப்ராம்ப்ட்டன் நூலகம்**

பிராம்ப்டன் நூலக கிளைகள் அனைத்தும் ஞாயிற்றுக்கிழமை மே 21, திங்கட்கிழமை, மே 22, மற்றும் செவ்வாய்க்கிழமை மே 23, ஆகிய நாட்களில் செயல்படமாட்டாது.

கல்விரீதியான, படைப்பாற்றல் வகையிலான மற்றும் தொழில்தகைமையான டிஜிட்டல் பிளாட்ஃபாரம் மற்றும் பலவகையான துறைசார்ந்த இ-புத்தகங்கள் மற்றும் ஆடியோ புத்தகங்கள், தொலைக்காட்சி மற்றும் திரைப்படங்களைக் கடனாக பெற www.bramptonlibrary.ca க்கு வருகை தாருங்கள்.
எங்களின் நிகழ்வுகளுக்கான கால அட்டவணை மூலமாக அனைத்து வயதினருக்குமான மெய்நிகர் நிகழ்ச்சிகளுக்கு பதிவு செய்யுங்கள் மற்றும் எங்கள் மின்னஞ்சல் வழி புதிய செய்திகளுக்கு பதிவு செய்துகொள்ளவும். Facebook, Twitter, Instagram, மற்றும் LinkedIn இல் எங்களைப் பின்பற்றுங்கள் மற்றும் iOS மற்றும் Google Play யில் பிராம்ப்டன் நூலக மொபைல் செயலியைப் பெற்று பதிவு செய்வதை உறுதி செய்யுங்கள். எங்கள் செயலி பற்றிய மேலும் விபரங்களுக்கு இங்கு க்ளிக் செய்யவும். எங்கள் அலுவலக பணியாளர்களுடன் நேரலையில் பேச அல்லது ஒரு கேள்வி கேட்க எங்கள் வலைத்தளத்திற்கு வருகை தாருங்கள்.

**பிராம்ப்டன் விலங்குகள் சேவை**

பிராம்ப்டன் விலங்குகள் காப்பகமானது மே 22, திங்கட்கிழமை மூடப்பட்டு மே 23, செவ்வாய்க்கிழமையன்று திறக்கப்படும்.

விலங்குகள் கட்டுப்பாட்டு அமைப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7 மணி முதல் இரவு 11 மணி வரையும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8 மணி முதல் மாலை 6:30 வரையும் சாலைகளில் இயங்கும். இந்த நேரங்களுக்கு அப்பால், இந்த விலங்குகள் கட்டுப்பாட்டு அமைப்பு அவசர நிலைமைகளுக்கு மட்டுமே செவிசாய்க்கும்

**இணைந்திருங்கள்**

எந்த விசாரிப்புக்களுக்கும் குடியிருப்புவாசிகள் 311 அல்லது 905.874.2000 (பிராம்ப்டன் க்கு வெளியில்) ஐ அழைக்கலாம், பிராம்ப்டன் 311 செயலியை அழைக்கலாம் (App Store அல்லது Google Play யில் கிடைக்கிறது), www.311brampton.ca க்கு வருகை தரலாம் அல்லது 311@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்யலாம். பிராம்ப்டன் நகரம் அல்லது பீல் பிராந்திய விஷயங்கள் ஏதுமிருப்பின் நாங்கள் 24/7 அடிப்படையில் காத்திருக்கிறோம்.

**மூடப்படும் அலுவலகங்கள்**

நகர் மன்றம் மற்றும் பிராம்ப்டன் நகர நிர்வாக அலுவலகங்கள் மே 22, திங்கட்கிழமை மூடப்பட்டு மே 23, செவ்வாய்க்கிழமையன்று திறக்கப்படும்.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca